# பொங்கல் – சிறப்புக் காகிதக்கலை




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பொங்கல் சிறப்புக் காகிதக்கலை

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வ.எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | தமிழர் திருநாள் (தைபொங்கல்) | | 1 |
| 2. | காகிதக்கலை | வாழ்த்து அட்டை | 5 |
| 3. | | மாட்டு வண்டி | 19 |
| 4. | | மாடு | 28 |
| 5. | | கரும்பு | 37 |
| 6. | | நெற்கதிர்கள் | 43 |
| 7. | | பானை | 50 |

# தமிழர் திருநாள் (தைப்பொங்கல்)

**"தமிழர் போற்றும் நன்னாள்**

**உழவர் போற்றும் பொன்னாள்"**

என்று சிறப்பிக்கப்படும் தைத்திருநாள், சமயங்கள் கடந்து கொண்டாடப்படும் தமிழர்திருநாளாகும். இத்தகைய சிறப்பினை பெற்ற, தைப்பொங்கல் திருநாளின் சிறப்பினை இனி காண்போம்.

**பொங்கல் :**

பொங்கல் என்பதற்கு, "பொங்கி வழிதல்" என்று பொருள். பொங்கல் திருநாள் அன்று, புதிய பானையில், புது அரிசியிட்டு, இருபுறமும் கரும்பு கட்டி, பொங்கல் வைப்பர். பொங்கல் பானையில் பொங்கல் வைக்கும் போது, அரிசியில் இருந்து, பால் பொங்கி வரும். பால் பொங்கி வருவது போல, தைத்திருநாளான தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் மக்கள் அனைவரும் வாழ்வுடனும், வளமுடனும் சிறப்பாக வாழ வேண்டும் என்று உரைப்பதே பொங்கல் திருநாளாகும்.



## பொங்கலோ பொங்கல் :

உழவர்கள் ஆடி மாதத்தில் விதை விதைத்து, மார்கழி மாத இறுதியில், நெற்கதிர்களை அறுவடை செய்து, தை முதல் நாளன்று வீடு வந்து சேர்க்கும் திருநாளே பொங்கல் திருநாளாகும். இந்நாளில், உழவர்கள் தம் உழைப்பிற்கேற்ற பயனை அடைவர். தைத்திருநாள் அன்று, உழவர்கள் தன் உழைப்பிற்கு உறுதுணையாக இருந்த நிலம், நீர், காற்று, சூரியன் போன்ற இயற்கை சக்திகளுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் சிறந்த நாளாகும்.

**"தை பிறந்தால் வழி பிறக்கும்“**

என்ற பழமொழிக்கேற்ப, உழவர்களுக்கு நல்ல விளைச்சலை கொடுத்த, தைத்திருநாளை சிறப்புடனும், மகிழ்வுடனும் கொண்டாடுவோம்.

## பொங்கல் வைக்கும் முறை :-

தைப்பொங்கல் அன்று, அதிகாலையில் வீட்டின் முன் வாசலில் வண்ணக் கோலமிடுவர். சூரியன் இருக்கும் திசையை நோக்கி, புதிய அடுப்பு வைப்பர். வீட்டின் முன் வாசலில் இருபுறமும் கரும்பு கட்டி, நடுவில் புதிய பானையில் மஞ்சள் கட்டி, புது அரிசியிடுவர். பொங்கல் பால் பொங்கி வரும் போது, வீட்டில் உள்ளோர் அனைவரும் "பொங்கலோ பொங்கல்“ என்று குலவையிடுவர். பொங்கல் பால் பொங்கி வருவது போல, வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும் என்பதனை, பொங்கல் உணர்த்துகிறது.

பொங்கலை முதலில் சூரியனுக்கு படைப்பர். பின், வீட்டில் உள்ளோர் பொங்கல் மற்றும் தித்திப்பான கரும்பினை உண்டு மகிழ்வர். பொங்கல் அன்று, வீட்டின் வாசலில் மஞ்சள், வேப்பிலை, கண்ணுப்புல்லுச்செடி போன்றவற்றை இணைத்துக் கட்டுவர் இதனை "காப்பு கட்டுதல்" என்று அழைப்பர்.

## மாட்டுப்பொங்கல் :

தைப்பொங்கலுக்கு, மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகையே மாட்டுப்பொங்கல். மனிதர்களின் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பது, கால்நடைகள் தான். உழவுக்கும், தொழிலுக்கும் பயன்படும் கால்நடைகளுக்கு, நன்றி தெரிவிக்கும் திருநாளே மாட்டுப்பொங்கல்.

## கொண்டாடும் முறை :



உழவுக்கு பயன்படும் மாடுகளுக்கும், பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையே மாட்டுப்பொங்கல். மாட்டுப்பொங்கல் அன்று, மாடுகளின் இருப்பிடமான, தொழுவத்தை சுத்தம் செய்வர். மாடுகளை குளிப்பாட்டுவர். மாடுகளின் கொம்புகளுக்கு, வர்ணம் பூசுவர். மாட்டின் கழுத்தில், சலங்கை கட்டுவர். மாட்டுப்பொங்கல் அன்று தான், மாடுகளுக்கு புதிதாக மூக்கணாங்கயிறு, தாம்புகயிறு அணிவர். மாட்டுப் பொங்கல் அன்று, மாட்டுத்தொழுவத்தில் பொங்கலிடுவர். உழவுக் கருவிகளை சுத்தம் செய்து, சந்தனம், குங்குமம் பூசுவர். மாடுகளுக்கு பொங்கல், தேங்காய், பழம் கொடுப்பர். மாட்டுப் பொங்கல் அன்று, மாலை ஜல்லிக்கட்டுநிகழ்ச்சி நடைபெறும்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்"

என்ற பாரதி வாக்கு மெய்ப்படும் வகையில், பொங்கல் திருநாள் கொண்டாடப்பட வேண்டும். பொங்கல் திருநாள் அன்று, உண்ணும் சர்க்கரைப் பொங்கலை போல், நம் வாழ்வும் இனிமையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. உழவன் இயற்கைக்கும், நாம் உழவனுக்கும், நன்றி தெரிவிக்கும் திருநாளே தைத்திருநாள்.



# வாழ்த்து அட்டை

| வ.எண் | தேவையானப் பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | A4 அளவிலான பச்சை வண்ணக் காகிதம் (A4 size Green Colour paper) | 1 |
| 2. | A4 அளவிலான வெள்ளை வண்ணக் காகிதம் (A4 size White colored paper) | 1 |
| 3. | அலங்கரிப்பதற்குத் தேவையானப் பொருட்கள் (Decoration things) | 1 |
| 4. | A4 அளவிலான ஊதா வண்ணக் காகிதம் (Purple colour A4 size paper) | 2 |
| 5. | சிறிய அளவிலான மஞ்சள் வண்ண மினுமினுப்புக் காகிதம் (A small amount of Yellow glitter sheet) | தேவைக்கேற்ப |
| 6. | சிறிய அளவிலான ஆரஞ்சு வண்ண மினுமினுப்புக் காகிதம் (A small amount of orange glitter sheet) | 1 |
| 7. | கத்தி (Knife) | 1 |
| 8. | பசைப்பட்டை (Tape) | 1 |
| 9. | பஞ்சு (Cotton) | 1 |
| 10. | குச்சி (Stick) | 1 |
| 11. | பென்சில் (Pencil) | 1 |
| 12. | சார்பு வட்டமானி (Pro Circle) | 1 |
| 13. | கத்தரிக்கோல் (Scissor) | 1 |
| 14. | வண்ண எழுதுகோல்கள் (Colour Sketches) | 1 |
| 15. | அளவுகோல் (Scale) | 1 |






# வாழ்த்து அட்டை




**வாழ்த்து அட்டைக்குத் தேவையானப் பொங்கல் பானை, கரும்பு மற்றும் சூரியன் ஆகியவற்றைத் தயார் செய்து கொள்ளலாம்.**

**முதலில் பொங்கல் பானை தயார் செய்ய வெள்ளை வண்ணக் காகிதத்தில் 5 புள்ளி 7 வரிசையில் நேர்ப்புள்ளிகளை வைத்து படத்தில் உள்ளது போல் வரைந்து கொள்ளவும்.**


# வாழ்த்து அட்டை


**வரைந்த பானையை வெட்டி எடுத்துக்கொண்டு, விருப்பம் போல வண்ணம் தீட்டி அலங்கரித்துக் கொள்ளவும்.**






**அடுத்ததாகக் கரும்பு செய்ய ஊதா வண்ணக் காகிதத்தைப் பாதியாக மடித்துக் கரும்பு போல் வரைந்து வெட்டி எடுத்துக்கொள்ளவும்.**





# வாழ்த்து அட்டை

பச்சை வண்ணக் காகிதத்தைப் பாதியாக மடித்து தோகை வரைந்து வெட்டி எடுத்துக்கொள்ளவும்.





வெட்டி வைத்துள்ள தோகைகளைக் கரும்பின் அடிப்பகுதியின் மேற்புறமாக ஒட்டிக்கொள்ளவும்.




# வாழ்த்து அட்டை


**சூரியன் வரைய மஞ்சள் வண்ண மினுமினுப்புக் காகிதத்தில் வட்டம் வரைந்து வெட்டி எடுத்துக்கொள்ளவும்.**






**ஆரஞ்சு வண்ண மினுமினுப்புக் காகிதத்தில் சிறிய அளவில் மெல்லிய கோடுகள் போல் வெட்டி எடுத்துக்கொள்ளவும்.**





# வாழ்த்து அட்டை

வெட்டி வைத்துள்ள கோடுகளை மஞ்சள் வட்டத்தின் பின்புறமாக சூரியக்கதிர்கள் போல் ஒட்டிக்கொள்ளவும்.





அடுத்ததாகச் சிறிய அளவிலான வெள்ளைக் காகிதத்தில் “HAPPY PONGAL” என்று வண்ண எழுதுகோல் கொண்டு எழுதி, அதனைத் தனியே வெட்டி எடுத்துக்கொள்ளவும்.



# வாழ்த்து அட்டை

சிறிய அளவிலான வெள்ளைக் காகிதத்தில், படத்தில் காட்டியுள்ளது போல் நடுவில் பொங்கல் பானையையும், அதன் ஒருபக்கத்தில் கரும்பையும், மற்றொரு பக்கத்தில் சூரியனையும், மேலே "HAPPY PONGAL" என்று எழுதி வைத்துள்ள காகிதத்தையும் ஒட்டித் தனியே வைத்துக்கொள்ளவும்.








# வாழ்த்து அட்டை

வாழ்த்து அட்டை செய்வதற்கு A4 அளவிலான பச்சை வண்ணக் காகிதத்தைச் சரிபாதியாக மடித்துக் கொள்ளவும்.




மடித்த காகிதத்தின் முன்பகுதியை எடுத்துக் கொண்டு அதன் நடுப்பகுதியை மையமாக வைத்து மேலும் கீழும் சமமான இடைவெளி விட்டு நேர்க்கோடு வரைந்து கொள்ளவும்.



# வாழ்த்து அட்டை

**வரைந்த நேர்க்கோட்டினைக் கத்தி மற்றும் அளவுகோல் உதவியுடன் வெட்டிக்கொள்ளவும்.**





**சிறிதளவு வெள்ளை வண்ணக் காகிதத்தை எடுத்துக்கொள்ளவும்.**




# வாழ்த்து அட்டை

பின் அதனைப் படத்தில் உள்ளவாறு மடித்து நேர்க்கோட்டின் கீழ்ப்பகுதியில் சொருகிக் கொள்ளவும்.











# வாழ்த்து அட்டை

**பின்பு வாழ்த்து அட்டையை விரித்து அதன் இடது பக்கத்தில், ஏற்கனவே ஒட்டி வைத்துள்ள [பானை, கரும்பு, சூரியன்] படங்களைப் படத்தில் காட்டியுள்ளது போல் பின்புறமாகப் பசை தடவி ஒட்டிக்கொள்ளவும்.**





# வாழ்த்து அட்டை


**வாழ்த்து அட்டையின் உட்புறமாக மேற்பகுதியைத் தவிர்த்து மற்ற மூன்று பக்கங்களிலும் பசை தடவி ஒட்டிக்கொள்ளவும்.**



# வாழ்த்து அட்டை

“இனிய பொங்கல் வாழ்த்துகள்” என்று வெள்ளை காகிதத்தில் வண்ண எழுதுகோல் கொண்டு எழுதி வெட்டி எடுத்துக்கொண்டு, வாழ்த்து அட்டையின் முன்பக்கத்தில் ஒட்டி விருப்பம் போல் அலங்கரித்துக் கொள்ளவும்.









# வாழ்த்து அட்டை

**வாழ்த்து அட்டையின் முன்பகுதியில் உட்புறமாக சொருகியுள்ள காகிதத்தை மெதுவாக மேல்நோக்கித் தள்ளவும்.**








**உங்கள் நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க அழகு நிறைந்த பொங்கல் வாழ்த்து அட்டைத் தயார்.**

# மாட்டு வண்டி

| வ.எண் | தேவையானப் பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | A4 அளவிலான மஞ்சள் வண்ணக் காகிதம் (A4 size yellow colored paper) | 1 |
| 2. | A4 அளவிலான கருநீல வண்ணக் காகிதம் (A4 size dark blue colored paper) | 1 |
| 3. | A4 அளவிலான நீல வண்ணக் காகிதம் (A4 size blue colored paper) | 1 |
| 4. | A4 அளவிலான பழுப்பு வண்ணக்காகிதம் (A4 size brown colored paper) | 2 |
| 5. | பசை (Glue) | தேவைக்கேற்ப |
| 6. | கருப்பு வண்ண எழுதுகோல் (Black pen) | 1 |
| 7. | கவராயம் (Compass drawing tool) | 1 |
| 8. | எழுதுகோல் (Pencil) | 1 |
| 9. | அளவுகோல் (Scale) | 1 |
| 10. | கத்தரிக்கோல் (Scissor) | 1 |
| 11. | குச்சி (Stick) | 1 |






# மாட்டு வண்டி

























# மாட்டு வண்டி

இரண்டு பழுப்பு வண்ணக் காகிதத்தை எடுத்து சரிபாதியாக மடித்து நான்கு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும்.













# மாட்டு வண்டி

**ஒரு துண்டினை எடுத்து குச்சியின் மேல் இறுதிவரை சுருட்டி ஒட்டிக் கொள்ளவும். அதே போல் நான்கு துண்டுகளையும் சுருட்டி எடுத்து, அதன் முனைகளைச் சம அளவில் படத்தில் காட்டியுள்ளது போல் எடுத்துக்கொள்ளவும்.**










# மாட்டு வண்டி

அதில் இரண்டு துண்டுகளை ‘V’ வடிவில் பசை தடவி ஒட்டி எடுத்துக் கொண்டு, அதன் முனையில் மற்றொரு துண்டினை ஒட்டி விடவும். வண்டியின் முன் பகுதி தயார்.





சக்கரம் தயார் செய்ய நீல வண்ண வரைபடத்தாளைச் சரிபாதியாக மடித்துப் பெரிய அளவிலான வட்டம் வரைந்து வெட்டிக் கொள்ளவும்.












# மாட்டு வண்டி

**கிடைத்த வட்டங்களின் நடுப்பகுதில் சிறிய வட்டம் வரைந்து, அதனைச்சுற்றி படத்தில் உள்ளது போல் ஆரங்களை வரைந்து கருப்பு வண்ணம் தீட்டவும்.**



**மீதமுள்ள பழுப்பு வண்ணத் துண்டினை இரண்டு சக்கரங்களுடன் படத்தில் காட்டியவாறு இணைக்க வேண்டும்.**








# மாட்டு வண்டி

வண்டியின் முன் பகுதியைச் சக்கரத்தின் உள்முனைகளைத் தொடுமாறு படத்தில் காட்டியுள்ளது போல் பசை தடவி ஒட்டிக் கொள்ளவும்.



மஞ்சள் வண்ணக் காகிதத்தைப் படத்தில் காட்டியது போல் சம அளவில் வெட்டிக் கொள்ளவும்.



# மாட்டு வண்டி

மஞ்சள் வண்ணக் காகிதத்தின் ஒரு பகுதியைப் “ப” வடிவில் மடித்துப் படத்தில் காட்டியவாறு ஒட்டிக்கொள்ள வேண்டும்.





மீதமுள்ள மஞ்சள் வண்ணக் காகிதத்தை வளைத்து வண்டியின் மேற்கூரை போல் ஒட்டவும்.









# மாட்டு வண்டி

நீல வண்ணக் காகிதத்தில் 1.5 செ.மீ. அகலமுள்ள 6 கோடுகளை வரைந்து வெட்டிக் கொள்ளவும்.





கிடைத்தத் துண்டுகளை வண்டியின் மேற்கூரையின் மேல் சமமான இடைவெளியுடன் ஒட்டிக் கொள்ளவேண்டும். இப்போது மாட்டுவண்டி தயார்.







# மாடு

| வ.எண் | தேவையான பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | A4 அளவிலான வெள்ளை வண்ணக் காகிதம் (A4 size white colored paper) | 1 |
| 2 | A4 அளவிலான இளஞ்சிவப்பு வண்ணக் காகிதம் (A4 size lightred colored paper) | 1 |
| 3 | கண் பட்டன் (eye button) | 1 |
| 4 | பசை (Glue) | 1 |
| 5 | கருப்பு வண்ண பேனா (Black color pean) | 2 |





# மாடு



















# மாடு

8 X 14cm அளவுள்ள வெள்ளை காகிதத்தை எடுத்து பாதியாக மடித்து படத்தில் காட்டியவாறு மாட்டின் உடல் பகுதியை வரைந்து வெட்டிக் கொள்ளவேண்டும். இப்போது 2 உடல் பகுதி கிடைக்கும்.












# மாடு

மாட்டின் உடல் பகுதியில் விருப்பம் போல் கருப்பு வண்ணம் தீட்டவும். இப்போது மாட்டின் முன் மற்றும் பின் உடல் பகுதி கிடைக்கும். மாட்டின் உடலின் அடிப்பகுதில் ¼ inch மடித்து வண்ணம் திட்டினால் கால் பகுதி கிடைக்கும்.



உடல் பகுதியை இணைக்க 2 X 30 செ.மீ அளவுள்ள 2 வெள்ளை காகிதத்தை படத்தில் காட்டியவாறு ஒட்டிக்கொள்ள வேண்டும்.







பின்பு அதை உள்புறம். வெளிப்புறமாக இறுதிவரை மடித்து ஒட்டிக்கொள்ளவும்.



அதன் இருபுறமும் பசை தடவி மாட்டின் உடல் பகுதியை இணைத்து ஒட்டிக்கொள்ள வேண்டும்.







# மாடு

6X4 செ.மீ அளவுள்ள வெள்ளை காகிதத்தில் மாட்டின் முகம் மற்றும் கொம்பு வரைந்து வெட்டிக்கொள்ள வேண்டும்.











# மாடு

**கிடைத்த கொம்புகளுக்கு கருப்பு வண்ணம் தீட்டவும்.**



**4 X 4cm இளஞ்சிவப்பு காகிதத்தில் சிறிய நீள்வட்டம் வரைந்து வெட்டி கொள்ளவும்.**








# மாடு

மாட்டின் முகத்தில் கண்கள், கொம்புகள் மற்றும் வாய் பகுதியை படத்தில் காட்டியவாறு ஓட்டிக்கொள்ள வேண்டும்.



மாட்டின் முகத்தை சிறிய காகிதத்தை கொண்டு உடல் பகுதியோடு ஓட்ட வேண்டும்.









# மாடு

**இப்போது அழகிய மாடு தயார்.**








# கரும்பு

| வ.எண் | தேவையானப் பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | A4 அளவிலான கருப்பு வண்ணக் காகிதம் (A4 size black paper) | 1 |
| 2. | A4 அளவிலான பச்சை வண்ணக் காகிதம் (A4 size green paper) | 1 |
| 3. | கத்தரிக்கோல் (Scissors) | 1 |
| 4. | பசை (Glue) | தேவைக்கேற்ப |





# கரும்பு

A4 அளவிலான கருப்பு வண்ணக் காகிதத்தை 18X18செ.மீ அளவில் சதுர வடிவமாக வெட்டி எடுத்துக்கொள்ளவும்.




சதுர வடிவக் காகிதத்தைச் சரிபாதியாக செவ்வக வடிவில் மடித்து வெட்டி எடுத்துக்கொள்ளவும்.





# கரும்பு

இரண்டு செவ்வக வடிவக் காகிதத்தையும் தனித்தனியாக எடுத்து ஒரு முனையைப் படத்தில் காட்டியுள்ளது போல் உட்புறமாக சுருட்டி ஒட்டிக்கொள்ளவும்.



கிடைத்துள்ள கரும்பின் அடிப்பகுதிகளின் இருமுனைகளையும் சமமாக வெட்டி எடுத்துக்கொள்ளவும்.



# கரும்பு

A4 அளவிலான பச்சை வண்ணக் காகிதத்தை 15X15செ.மீ அளவில் செவ்வக வடிவமாக வெட்டி எடுத்துக்கொள்ளவும்.









# கரும்பு


பச்சை வண்ண செவ்வக வடிவ காகிதத்தை இரண்டாக மடித்து படத்தில் காட்டியுள்ளவாறு இடைவெளி விட்டு வெட்டிக்கொள்ளவும்.





அதேபோல் மற்றொரு பச்சை வண்ண காகிதத்தை மடித்து வெட்டிக்கொள்ளவும்.






# கரும்பு

வெட்டிய காகிதத்தை விரித்துக் கரும்பின் மேற்பகுதியில் தோகை போல் ஒட்டிக்கொள்ளவும்.





பொங்கல் பண்டிகையைக் கொண்டாட சுவையான கரும்பு தயார்.





# நெற்கதிர்கள்

| வ.எண் | தேவையானப்பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | மஞ்சள் வண்ணக் காகிதம் (Yellow colored paper) | 1 |
| 2. | பச்சை வண்ணக் காகிதம் (Green colored paper) | 1 |
| 3. | குச்சி (Stick) | 1 |
| 4. | பசை (Glue) | தேவைக்கேற்ப |
| 5. | எழுதுகோல் (Pen) | 1 |
| 6. | அளவுகோல் (Criterion) | 1 |
| 7. | நூல் (தேவைக்கேற்ப) Thread (as required) | தேவைக்கேற்ப |





# நெற்கதிர்கள்




















# நெற்கதிர்கள்

மஞ்சள் வண்ணக் காகிதத்தை எடுத்துக் கொண்டு படத்தில் உள்ளவாறு தேவைக்கேற்ப சிறு சிறு கோடுகளாக வரைந்து கொள்ளவும்.




வரைந்த கோடுகளைத் தனித்தனியாக வெட்டிக் கொள்ளவும்.



# நெற்கதிர்கள்

A4 அளவிலான பச்சை வண்ணக் காகிதத்தைச் சரிபாதியாக மடிக்கவும். பின்பு மீண்டும் இரண்டு முறை படத்தில் உள்ளது போல் மடித்துக் கொள்ளவும்







# நெற்கதிர்கள்

மடித்தக் காகிதத்தில் தாள் [இலை] வடிவத்தை வரைந்து வெட்டி எடுத்துக் கொள்ளவும்.






வெட்டி வைத்துள்ள மஞ்சள் வண்ணக் காகிதத்தின் ஒரு துண்டை எடுத்துக் குச்சியின் மேலிருந்து கீழாக படத்தில் காட்டியுள்ளது போல் சுருள் வடிவில் சுற்றிக் கொள்ளவும்.






# நெற்கதிர்கள்

மீதமுள்ள மஞ்சள் வண்ணக் காகிதத் துண்டுகளையும் மேற்கூறியது போல் சுருட்டி நெல்மணிகள் போல் செய்து கொள்ளவும்.





கிடைத்த நெல் மணிகளைக் குச்சியின் மேற்பகுதியில் வைத்து நூல் கொண்டு கட்டிக்கொள்ளவும்.



# நெற்கதிர்கள்

வெட்டிவைத்துள்ள பச்சை வண்ணத் தாள்களைக் குச்சியில், படத்தில் உள்ளவாறு ஒட்டிக் கொள்ளவும்.

அறுவடைத் திருநாளில் அறுவடை செய்ய நெற்கதிர்கள் தயார்.



# பானை

| வ.எண் | தேவையானப் பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | செய்தித்தாள் (news paper) | தேவைக்கேற்ப |
| 2. | ஏதேனும் ஒரு உருளை வடிவ பொருள் (any cylindershpae things) | 1 |
| 3. | கத்தரிக்கோல் (Scissors) | 1 |
| 4. | பசை (Glue) | தேவைக்கேற்ப |
| 5. | வண்ணப்பூச்சு (பெயிண்ட்) | சிவப்பு |
| 6. | அலங்கரிப்பதற்கு தேவையான பொருட்கள் (Decoration things) | தேவைக்கேற்ப |
| 7. | பஞ்சு (Cotton) | 1 |





# பானை

செய்திதாளில் 27 X 17 செ.மீ அளவிலான செவ்வக வடிவ [35 முதல் 50] துண்டுகளை வெட்டி எடுத்துக் கொள்ளவும்.




செவ்வக வடிவ காகிதத்தை எடுத்துக்கொண்டு அதன் ஒரு முனையை படத்தில் காட்டியுள்ளது போல் உட்புறமாக சுருட்டி ஒட்டிக் கொள்ளவும்.



# பானை

**அதே போன்று பானைக்கு தேவையான தேவையான (35 முதல் 50) வரை சுருட்டிக் கொள்ளவும்.**



**படத்தில் உள்ள சுருட்டிய காகிதங்களை உட்புறமாக சுருட்டிக் கொள்ளவும், அதன் முனையில் பசை தடவி மற்றொரு சுருட்டி வைத்துள்ளக் காகிதத்தை இணைத்துமேலும் சுருட்டிக்கொள்ளவும்.**





# பானை

இதே போல் 15–20 வரை பானையின் அடிப்பகுதிக்கு தகுந்தாற் போல் சுருட்டிக் கொள்ளவும்.



படத்தில் காட்டியுள்ளதுபோல் நடுப்பகுதிக்கு ஏதேனும் உருளை வடிவில் பொருளை வைத்து அதை சுற்றி தேவைக்கேற்ப (10–15) சுருட்டிக்கொள்ளவும்.










# பானை

பானையின் மேல் பகுதிக்கு நடுப்பகுதியில் உள்ள உருளை வடிவை விட சற்று பெரிய அளவிளான உருளை வடிவ பொருளின் ஒன்றன் மீது ஒன்றாக படத்தில் காட்டியவாறு சுருட்டிக் கொள்ளவும்.



சுருட்டி வைக்கப்பட்டுள்ள நடுப்பகுதியில் விரலை வைத்து உட்புறமாக படத்தில் கட்டியாவாறு மெதுவாக விரித்துக்கொள்ளவும்.



1




2



3

# பானை

இதே போல் பானையின் மற்ற இரு பாகங்களையும் மெதுவாக விரித்துக் கொள்ளவும்.




இப்பொழுது நமக்கு தேவையான பானையின் மேல்பகுதி, நடுப்பகுதி, அடிப்பகுதி தயார்.





# பானை

**மூன்றையும் அடிப்பகுதி, நடுப்பகுதி,மேல்பகுதி ஒன்றன் மீது ஒன்றாக பசை தடவி ஒட்டிக்கொள்ளவும்.**



1



2



3







# பானை

கிடைத்துள்ள பானையில் சிவப்பு வண்ணம் தீட்டிக் கொள்ளவும்.



பின் விருப்பத்திற்கேற்ப பானையை அலங்கரித்துக் கொள்ளவும்.



# பானை

பானையின் மேல்பகுதியில் வெள்ளை நிற பஞ்சுகளை சிறிது அளவு பசை தடவி ஒட்டிக் கொள்ளவும்.



இப்பொழுது பொங்கலை கொண்டாட பொங்கல் பானை தயார்.














உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com